

# ஞான குரு பீடத்தில் இளம் சூரியன்!


அது இளங்காலைநேரம். காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயில், தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஆலயத்தின் குளத்தைச் சுற்றி பக்தர்கள் பெருங்கூட்டமாகக் கூடி இருக்கிறார்கள். ஸ்ரீகாஞ்சி காமகோடி மடத்திற்கு இளைய புதுப் பெரியவராகப் பட்டமேற்கப் போகும் சுவாமிகள், அன்று அங்கே அந்தத் திருக்குளத்தில் நீராடிக் காவி உடை ஏற்று சந்நியாசம் மேற்கொள்கிறார்.

அன்று மே மாதம் 29-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை

இன்னும் இளஞாயிறு ஒளிபரப்பவில்லை. சுவாமிகள் சந்நியாசம் ஏற்கும் இடத்தில் தூவினுற்போல இருள் சூழ்ந்திருக்கிறது. படித்துறைக்கு சங்கரன் என்ற திருநாமம் தரித்த அந்த இளம்பாலகன் வருகிறுன்.

மந்திரங்கள் ஒலிக்கின்றன. சங்கரன் திருக்குளத்தில் மூழ்கி எழுந்து நீராடுகிறுன். எழுந்து முப்புரிநூலை அறுத்து எறிகிறுன். காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சுரசுவதிசுவாமிகள் காஷாய உடையைப் பிரித்துப் போர்த்தி விடுகிறுர். அவரிடமிருந்து தண்டமும் கமண்டலமும் பெற்று, துறவியின் கோலத்துடன் இளையவர் சந்நியாசம் கேட்டு வாங்கிக் கொள்ள, பெரியவரை நோக்கி நடக்கிறுர். வேத கோஷங்கள் முழங்க, 'ஜயஜய சங்கர ஹரஹர சங்கர' என்ற ஒலி மங்களமாய் சூழ்ந்து ஒலிக்க, வெடிகள் அதிர, இளைய சுவாமிகள் பட்டமேற்கிறுர். வானத்தில் இரண்டு கருடன்கள் வட்டமிட்டு வணக்கம் செலுத்துகின்றன.

ஸ்ரீ சங்கர ஆனந்தேந்திரசுவாமிகள், இளைய புதுப் பெரியவராக, ஸ்ரீகாஞ்சிமடத்தின் எழுபதாவது பீடாதிபதியாகப் பதவிக்குரியவராகிவிட்டார்...



சங்கர ஆனந்தேந்திரர் பயின்ற தண்டலம் ஆரம்ப பாடசாலை

மேளதாளங்கள் முழக்கமிடுகின்றன. வெளியே மண்டபத்துக்கு வந்து சிறிது நேரம் ஸ்ரீஜயேந்திர சரசுவதிசுவாமிகளும் அவரைப் பின்தொடர்ந்து நிற்கும் இளைய சுவாமிகளும் காட்சி தருகிறுர்கள். பக்தர்கள் கரம் குவித்து வணங்கி 'ஜயஜய சங்கர – ஹர ஹர சங்கர' என்று கோஷமிடுகிறுர்கள். இருவரும் ஸ்ரீகாமாட்சி அம்மனின் கர்ப்பக்கிருகத்துக்குச் சென்று பூஜித்துவிட்டு வெளியே வருகிறுர்கள். மேளதாள வாத்தியங்கள் முழங்க, மடத்திற்குச் செல்லுகிறுர்கள். மடத்துக்கு முன்னுல் பெருமாள் மண்டசப்படியைத் தரிசிக்கிறுர்கள். அங்கே வைணவ சம்பிரதாயப்படி ஆராதனை மரியாதைகள் நடைபெறுகின்றன. கையில் தண்டமும், கமண்டலமுமாக, அருள்பொலியும் முகக்களையுடன் இளைய சுவாமிகள் காட்சிதருகிறுர்.

முதல்நாள்வரை பெரியோர்களைப் பணிவுடன் வணங்கி வந்த பதினுன்கு வயதுப் பாலகன், இன்று ஸ்ரீகாஞ்சிமடத்தின் புதிய பட்டமாக, இளைய துறவரசாக, ஸ்ரீசங்கர ஆனந்தேந்திரசுவாமிகளாக மாறிவிட்டார். பழுத்த சுமங்கலிகளும், முதிர்ந்த பெரியவர்களும் அவரைக் கீழே விழுந்து நமஸ்கரிக்கிறுர்கள். ஆத்திகர்கள் அந்த உருவில் ஒருபாலகனைக் காணவில்லை. அருளால் முதிர்ந்த அந்த ஆத்மாவையே தரிசிக்கிறுர்கள் சிரமேற்கரங்குவித்து அந்த ஆத்மாவையே வணங்குகிறுர்கள். இது நமது மதத்தில் மட்டுமே உணரக்கூடிய பெருமைமிகுந்த அனுபவம்.

இந்தப் புண்ணியபூமியில்தான் இப்படி ஒரு இளம் ஞானி இப்படி வழிவழியாக உருவாக முடியும். வழிகாட்டியாக வந்து, மேன்மைபொலியும் மடத்தின் பொறுப்பேற்று, அருளாசி வழங்கி, ஆத்திகர்களை வழி நடத்திச் செல்ல முடியும். அந்த ஓர் இளங்காலைப் பொழுதில், இளம்பாலகன் இளைய துறவரசாக மாறி, பக்தர்கள் அனைவர்கண்ணிலும் பெருமதிப்பிற்குரிய சுவாமிகளாக, ஸ்ரீசங்கரமடத்தின் பொறுப்பேற்கும் இளைய புதிய பெரியவராகக் காட்சிதரமுடியும். பக்தர்களின் வணக்கத்தையும் மரியாதைகளையும் ஏற்க முடியும்.

இத்தகைய மனப்பக்குவம் கொண்ட பக்தர்கள் பாக்கியம் செய்தவர்கள். இந்த மங்கல நிகழ்ச்சியைக் கண்டு தரிசித்து, பிறர் சொல்லக்கேட்டு உணர்ந்து, உள்ளும் புறமும் ஆனந்தம் சொரிய நின்ற நாம் எல்லோருமே கிடைத்தற்கரிய பெரும்பேறு பெற்றவர்கள்தாம்.

சங்கரன் என்ற பாலகனுக்கு இத்தகுபெருமை எப்படிக் கிடைத்தது? எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டான்? படிப்படியாக எப்படி இந்த மேன்மைமிகு மாற்றத்துக்குத் தயாராஞன்? தண்டலம் என்ற கிராமத்தில் சங்கரனின் பெற்றேரையும், உறவினரையும், நண்பர்களையும் கேட்கும்போது.., நம்மை மனமகிழச்செய்யும் அரிய செய்திகள் கிடைக்கின்றன..''

செங்கற்பட்டு மாவட்டத்தில் பெரியபாளையத்திலிருந்து ஊத்துக்கோட்டைக்குச் செல்லும் வழியில், சுமார் முன்னூறு வீடுகளே உள்ள சிறிய கிராமம் தண்டலம். அங்கே உள்ள சாதாரணக் கிராமப்பள்ளிக் கூடத்தில் ஐந்தாவது வகுப்பு வரை மட்டுமே பயின்றவன் சங்கரன்.

வகுப்பில் ஒவ்வொரு பாடத்தையும் அறிவுக்கூர்மையுடன் ஆர்வமாகப் படிப்பான். பிறவியிலேயே மிகுந்த ஞாபகசக்தியும், அரிய அறிவாற்றலும் கொண்டவன். சாதாரண விஷயங்களில் அக்கறை கிடையாது. சினிமா, பாட்டு, கதைகளில் அதிகப் பிரியம் இல்லை. ஆனுல், விஞ்ஞான நுட்பங்களில் –

ஒளி-2
சுடர்-7
ஜூலை-1983

எத்தனையோ மகான்கள்
இந்த ஞானபூமியில்
அத்தனை பேருக்கும்
எங்கள் வணக்கங்கள்.

## இவ்விதழில்...

புனித நதிகளை, பூஜித்து வழிபடுவதுஇந்துக்களின் சிறப்பான வழிபாட்டு முறைகளில் ஓர் அம்சம். அதிலும் தமிழ்மக்கள் காவிரி நதியின்பால் காட்டும் அன்பு மகத்தானது. பொன்னியென்றும், பொய்யாக் குலக்கொடி என்றும் போற்றி, காவிரியை ஒரு செல்லமகளாகவே கருதுவார்கள்.

ஆடிப்பதினெட்டின்போது ஓடிப்பெருகி வரும் காவிரியை நிறைசூலியாக – வளைகாப்பிற்காகத் தாய் வீடு வரும் குலமங்கையாகவே கருதி, குதூகலத்துடன் கொண்டாடுவார்கள். வளையல், கருகமணிகளையெல்லாம் ஆற்றிலே ஓலைச்சுருளுடன் மிதக்க விடுவார்கள்; வாய்க்குச் சுவையாக விதவிதமான சித்ரான்னங்களை செய்துவந்து நிவேதிப்பார்கள். மங்கல மஞ்சள் கயிறுகளை பெண்கள் ஒருவருக்கொருவர் கட்டி விடுவார்கள்.

காடுகழனிகளைச் செழிக்கவைத்துப் பாயும் காவிரியை நன்றியுடன் போற்றுவதாகவும், உற்ருர் உறவினருடன் ஒன்று சேர்ந்து வந்து நதி நீராடும் புனிதப் பெருவிழாவாகவும் அமைந்துள்ள 'ஆடிப் பெருக்கு' பண்டிகையில் மங்கலப் பெண்கள் மஞ்சள் கயிறு அணிந்து கொள்ளும் காட்சியே இவ்விதழ் அட்டையினை அணி செய்கிறது.

வண்ணப்படம் : ஹரலிங்கம்.

இந்த இதழில் வெளியாகியுள்ள படங்கள் சிலவற்றை எடுத்தவர்கள்: ஹரலிங்கம், பா. சுரேந்திரன், ஜே.டி.ஜானி. ஓம் சுப்பிரமணியம்

இந்த இதழில் பூஜைக்குரியதாக திருப்பரங்குன்றம் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி இடம் பெறுகிறுர்.

## அடுத்த இதழில்...

தங்கள் பூஜை அறையை அலங்கரிக்க நங்கநல்லூர் ஸ்ரீலட்சுமி ஹயக்ரீவப் பெருமாள் இடம் பெறுகிறுர்.

ஆண்டுச் சந்தா: (உள்நாடு) ரூ. 30
வெளிநாடுகளில்...
(விமானத் தபால் மூலம்) ஸ்ரீலங்கா – ரூ. 79-80
மலேசியா–சிங்கப்பூர்–மத்திய கிழக்கு நாடுகள் ரூ.88-80
அமெரிக்கா – கனடா – ரூ. 124-80
இங்கிலாந்து – பிரான்ஸ் –ரூ. 100-80
ஆயுள் சந்தா (உள்நாடு) – ரூ. 500
வெளிநாடுகள் – யு.எஸ். டாலர்கள் 150




பெரியவர்களுடன் புதியவர் அந்தப் படித்துறைக்கு வந்து சேர்ந்தார். மந்திர சங்கல்பங்களுடன் நீராடினார். தலையில் இருந்த மிச்சரோமங்களும் நீக்கப்பட்டன. பூணூலை அறுத்தெறிந்துவிட்டுக் காஷாய உடை அணிந்து, ருத்திராட்ச மாலையைப் பூண்டார் இளையசுவாமிகள். ஏற்கெனவே தயார் செய்திருந்த கோல், உரிய கிரியைகள் செய்விக்கப்பட்டு, தண்டமாகக் கையில் ஏற்கப்பட்டது. பெரியவர் கமண்டலத்தை எடுத்து அளித்து, காஷாய வஸ்திரத்தைத் தலையில் இழுத்துப் போர்த்தினார்கள். இளந்துறவி அருள் சுரக்கும் பார்வையுடன், அங்கே கூடிஇருந்தவர்களின் கண் கலங்கினாலும் அதைக் கவனியாமல், பொலிவு மிகுந்த முகத்தில் எந்தச் சலனமும் இன்றிப் படியேறி வந்துவிட்டார்.

இது போன்ற நிகழ்ச்சி காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜயேந்திர சரசுவதி சுவாமிகளுக்கு, பரமாச்சாரியார் ஸ்ரீசந்திரசேகரேந்திர சுவாமிகளால், 1954-ம் ஆண்டு நடத்தி வைக்கப்பட்டது. அப்படி ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சுவாமிகள் பட்டம் பெற்றபோது அவருக்கு வயது பத்தொன்பது. அதுமட்டும் அல்ல; அவருக்குத் தான் பட்டத்துக்கு வரப்போவது ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பே தெரியும். இப்போது பொறுப்பேற்றுள்ள, சங்கர ஆனந்தேந்திர சுவாமிகளுக்கு, இது மூன்று நாட்களுக்கு முன்புதான் தெரியும்.

1907-ம் ஆண்டு பதினொரு வயதில் பட்டத்துக்கு வந்தவர் பரமாச்சாரிய சுவாமிகள். அதற்கு நாற்பத்தேழு ஆண்டுகள் கழித்துப் பட்டத்துக்கு வந்தவர் ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகள். அதற்கு இருபத்தொன்பது ஆண்டுகள் கழித்து இளைய பெரியவராகப் பட்டமேற்றிருக்கிறார் ஸ்ரீ சங்கர ஆனந்தேந்திர சுவாமிகள். ஆத்திகமக்களின் பெருமதிப்புக்குரிய ஸ்ரீ காஞ்சிமடத்தின் பீடத்திற்கு, மூன்றாவது தலைமுறையாக ஒருவர் பொறுப்பேற்று, மூன்று பெரியவர்களுமே பக்தர்களின் தரிசனத்துக்கு உரியவர்களாகக் கிடைப்பது நாமெல்லோரும் செய்த பெரும்பாக்கியம். தமிழகத்தில் இருந்து, ஸ்ரீகாஞ்சிநகரில் அவர்கள் மூவருமே, ஜூலை மாதம் கடைசி வாரத்தில் வியாசபூஜையை ஒட்டிப் பக்தர்களுக்குக் காட்சி தந்தருளப் போகிறார்கள் என்பது, நாம் அனைவருமே பெரும் பேறாகக் கருதி, மகிழ வேண்டிய விஷயம்.

இப்போது புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இளைய சுவாமிகள், இப்போது ஆந்திரப்பிரதேசத்திலிருந்து தமிழ் நாட்டை நோக்கிப் பாதயாத்திரையாக நடந்து வந்து கொண்டிருக்கும், பரமாச்சாரியசுவாமிகளை எதிர்கொண்டு சந்தித்து ஆசிபெறப் பாதயாத்திரையாகப் புறப்பட்டிருக்கிறார்கள்.

வடக்கே இருந்து தெற்குநோக்கி வரும் பரமாச்சாரியாரின் புனித யாத்திரை –

தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் இளைய சுவாமிகளின் புனிதப் பயணம் –

இந்த இரு நிகழ்ச்சிகளையும் ஆத்திகப் பெருமக்கள் மிகுந்த அக்கறையுடன் கவனித்து வருகிறார்கள்.

அவர்கள் இருவரும் சந்தித்தபிறகு, காஞ்சி மாநகருக்குத் திரும்பி, முப்பெரும் ஞானிகளாக ஒருசேர நின்று தரிசனம் அளிக்கப்போகும் நிகழ்ச்சியைக் காணவும் மிகுந்த ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தப் புனித தரிசனத்தைக் கண்டு மகிழ்ந்து, உளமார உணர்ந்து பயன்பெறுவோம்.

ஜயஜய சங்கர! ஹரஹர சங்கர!

— பரந்தாமன்.

# இணையற்ற இரு மொழிகள் இணைபிரியாதிருக்கட்டுமே...

"பரந்த இந்தியக் கண்டத்தில் ஏறத்தாழ 1500 மொழிகள் பேசப்படுகின்றன. சுமார் 500 வழக்குகள், மொழியா, மொழிச் சிதைவா என்று நிர்ணயம் செய்யப்படாமல் இன்றும் இருக்கின்றன. இவற்றில் ஏறத்தாழ இருபது மொழிகள் பழைய இலக்கிய வடிவங்களை உடையவை. அவற்றுள் சம்ஸ்கிருதம் கிறித்து பிறப்பதற்கு 1,200 ஆண்டுகளுக்கு முன்னர் உருப்பெற்றதாகக் கருதப்படும் ரிக் வேதத்தைக் கொண்டுள்ளது. தமிழ் மொழி கிறித்து பிறப்பதற்கு ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இலக்கிய உருவத்தைப் பெற்றது. சங்கஇலக்கியமும், தொல்காப்பியமும், பிராஹ்மி கல்வெட்டுக்களும் பழைமையான எழுத்துருக் கொண்டவை.

சம்ஸ்கிருதத்திலிருந்து தமிழ் கடன் வாங்கியது போல் சம்ஸ்கிருதமும் தமது இலக்கியத்திற்குப் பல சொற்களைத் தமிழிலிருந்து கடன் வாங்கியுள்ளது. எல்லா மொழிகளும் கடன் வாங்குவது இயற்கை. சில கூடுதலாக வாங்கும். சில குறைவாக வாங்கும். இந்த அடிப்படையில் மொழிகளுக்குள் ஏற்றத்தாழ்வு கற்பிப்பது மொழியின் இயல்புக்கு எதிரானது.

வேதகால சம்ஸ்கிருத மொழி. பின்னர், தத்துவம் அதனை இன் சொல்லால் ஊட்டும் இதிகாசமும், புராணமும் ஆக மலர்ந்தது. அதனை அடுத்து, தத்துவ இலக்கிய நெறி தனியாகவும், இலக்கியத் துறை தனியாகவும் வளர்ந்து ஓங்கின. இலக்கியம், சிற்பம், மருத்துவம் முதலிய சாத்திரங்களும் வளர்ந்தோங்கின. எனவே இந்துமத வளமைக்கும் பரப்பிற்கும் சம்ஸ்கிருதம் பயன்பட்டது. சமஸ்கிருதப் படைப்பு பெரும்பாலும் பிராமணர் கையில் நின்றது என்று கூறமுடியாது. வேத காலத்தின் பின்னரும் பிராமணரல்லாதார், தீண்டத்தகாதார் என்று கூறப்படுபவர்கள் கூட சமஸ்கிருதத்தில் இலக்கியம் செய்தனர். சிற்பம், ஓவியம், சங்கீதம், நாட்டியம், நடனம் முதலியவற்றை பிராமணர்கள் மட்டும் வாழ்வு நெறியாகக் கொள்ளவில்லை. பெரும்பாலும் பிராமணர் அல்லாதாரே சிற்பம், சோதிடம், மருத்துவம் முதலியவற்றைத் தம் வாழ்வு முறையாகக் கொண்ருந்தனர். இந்தத் துறையிலுள்ள ரகசியங்களைக் காக்க சமஸ்கிருத மொழியில் எழுதினர். எனவே சமஸ்கிருதம் உயர்ந்தோர்களும், தாழ்ந்தோர்களும், அந்தணர்களும், பிற சாதியினர்களுக்கும், உரிய மொழி. சென்ற ஒன்றிரண்டு நூற்றுண்டுகளாகத் தென்னகத்தில் - குறிப்பாக தமிழகத்தில் - பிராமணர்கள் மட்டும் சம்ஸ்கிருதம் படித்ததால் அவர்களுக்குரிய மொழியாக அது மாறியது.

கேரளத்தில் ஏறத்தாழ இன்று மொத்த ஜனத்தொகையில் இருபது சதமானத்திற்குக் குறையாது காணப்படுபவர்கள் ஈழவர்கள். அவர்களிடையே உதித்த நாராயண குரு என்ற அத்துவைதவேதாந்தி இரு உபதேசங்களை அவர்களுக்குக் கூறினார். தீண்டாமை நீங்க சம்ஸ்கிருதம் படிக்குமாறும், கூட்டாகச் சங்கம் ஒன்று தமக்கென அமைக்குமாறும் சொன்னார். அந்த சமுதாயத்தில் உள்ளவர்களில் பலர் ஆயுர்வேத வைத்தியர்கள். எனவே சம்ஸ்கிருதம் அறிந்தவர்கள், தீண்டத்தகாத ஈழவர்கள் பிராமணர்களைவிட சம்ஸ்கிருத சுலோகங்களை மனப்பாடம் செய்து சொல்லியதால் உயர் சாதியினர் எதிர்ப்பு மனப்பான்மை குறைந்தது. இன்று கேரளத்தில் அந்தச் சமுதாயம் அரசியலிலும் பொருளாதாரத்திலும் முன்னணியில் நிற்கின்றது. பின்தங்கியவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் சம்ஸ்கிருதம் படிப்பதற்கு ஊக்குவிப்பது உயர்சாதியினரின் கடமை. இதனால் சம்ஸ்கிருத மொழி பிரசாரம் பெறும். எல்லோருக்கும் உரிய மொழியாக மாறி வளம் பெறும்.

சம்ஸ்கிருதம் போல், தமிழ் மொழியும் மத மொழியாக பக்தி இயக்க காலத்தில் உருப்பெற்றது. பாமரர் பேசும் மொழியில் அவர்கள் போற்றும் இசையில் பக்தி இயக்கம் பரப்பப்பட்டது. சீர்காழியிற் பிறந்த ஞான சம்பந்தரும், தொண்டை நாட்டு அப்பரும், சோழநாட்டு சுந்தரரும், மாணிக்கவாசகரும் தமிழால் பக்தியைப் பரப்பினர். ஆழ்வார்களும் இந்த உத்தியை மேற்கொண்டனர். பல சாதியைச் சேர்ந்த பக்தர்கள் தெய்வநிலை பெற்றனர். சைவமும், வைணவமும் புத்துயிர்பெற்று மக்கள் மதமாயின. தென்னகத்தில் தமிழ் மொழி பக்தி மார்க்க மொழியாக மாறியது. தமிழகத்தில் இந்து மத அறிவிற்கு சம்ஸ்கிருதத்தின் தேவை இரண்டாந்தரத் தேவையாக மாறியது.

வட நர்ட்டில் பௌத்தமும் சமணமும் நலிந்த சமயத்தில், தென்னகத்தில் அவை தொடர்ந்தன. சமஸ்கிருத எதிர்ப்பு அவ்விரு மதங்களுக்கு உள்ளோட்டமாக அமைந்திருந்தன. தமிழகத்தில் இவற்றின் செல்வாக்கால் சம்ஸ்கிருதத்தின் நலிவு கூர்மையானது.

சம்ஸ்கிருத வல்லுநர்கள் மாவட்ட மொழியை மதிப்பதில்லை. மக்கள் பேசும் ஒரு மொழியைப் பழித்து எவ்வளவு சிறந்த மொழியாயினும் நெடுநாள் செல்வாக்குடன் இருப்பது இயலாது. தூய தமிழ் வாதத்தின் தந்தையாகிய வீ.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் சம்ஸ்கிருத வல்லுநர்கள் தமிழைப் பழித்த காரணத்தால், தம் தூய தமிழ் வாதத்தை ஓர் இயக்கமாக மாற்றினார். மறைமலையடிகள் சம்ஸ்கிருதம் நன்கு அறிந்தவர். அவரும் தூய தமிழ்வாதத்தை வளர்த்தார். கேரள பாணினி என்ற இராஜ இராஜவர்மா மலையாளத்தில் சுத்த மலையாளி இயக்கத்தை ஆரம்பித்ததும், கன்னட நாட்டில் கல கன்னட வாதமும், ஆந்திராவில் விவகாரத்தெலுங்கு இயக்கமும் வலுவடைந்ததற்குக் காரணம், மாநில மொழியை சம்ஸ்கிருத வல்லுநர்கள் புறக்கணித்தமையாகும். பற்றுச் சார்பில்லாத ஒரு சிக்கலை ஆராய்ந்தால் அதற்குரிய தீர்வுகள் தென்படுவது இயற்கை. சம்ஸ்கிருதமும் தமிழும் இணைந்து, வெறுப்பின்றி, புறக்கணிப்பின்றி வளரவேண்டும். இதற்கு நாம் துணை செய்ய வேண்டும்.

— தஞ்சையில் நடந்த சம்ஸ்கிருத மாநாட்டை துவக்கிவைத்து தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் **திரு வ. அய். சுப்பிரமணியம்** ஆற்றிய பேருரையிலிருந்து.

## வெர்ஜீனியாவில் விஷ்ணு!

அமெரிக்காவிலுள்ள வெர்ஜீனியா நகரில் இரண்டேகால் அடி நீளமுள்ள மகாவிஷ்ணுவின் விக்கிரகம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ஸ்தபதி திரு. நாகேந்திரன், இந்தச் சிலையை அமைத்துக் கொடுத்துள்ளார்.

எலெக்ட்ரானிக்ஸ் பாடத்தில் — ராக்கெட் போன்ற புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகளில் ஆர்வம் உண்டு. அவற்றைப் பற்றி ஆவலோடு விவாதிப்பான்.

சில தலைமுறைகளாகவே அந்த ஊரில் மதிப்புக்குரிய குடும்பமாக விளங்கிவந்த, ஆந்திரபிராமணகுலத்தைச் சேர்ந் தது அந்த வம்சம். சங்கரனின் தந்தை, கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் வைதீக, ஆசாரசீலங்களைச் சிறிதும் வழுவாமல் பின்பற்றிவருபவர். ருக்வேதத்திலும், மற்ற மந்திரசாஸ்திரங் களிலும் புலமை பெற்ற பண்டிதர்.

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் காஞ்சிபுரம் மடத்தைச் சார்ந்த வேத அத்தியனபாடசாலையில், ருக்வேத போஜ ராகப் பொறுப்பேற்றார். சங்கரனும் பாடசாலை அமைந்திருந்த போளூருக்குத் தந்தையுடன் சென்று ஆறுவது வகுப்பில் சேர்ந்தான். அங்கே உயர்நிலைப்பள்ளியில் பலரும் போற்றும் படி முதல் மாணவனாகவே வந்தான். தந்தைக்கு அந்த அறிவு, ஞானமாக முதிரவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு, ருக்வேத பாடங்களைக் கற்க பாடசாலையில் சேர்த்துவிட்டார்.

சாதாரணமாக ஏழு ஆண்டுகளில் கற்று முடிக்க வேண் டிய அந்த அரிய பாடங்கள் முழுவதையும் அவன் மூன்றே ஆண்டுகளில் கற்றுத் தேர்ந்துவிட்டான். மற்றவர்கள் ஐந் நூறு தடவைகள் சொல்லி மனப்பாடம் செய்யும் மந்திரங் களை இரண்டே முறை சொல்லி மனத்திற் பதியவைத்துக் கொண்டுவிடுவான்.



குடும்பத்தாருடன்...

தமிழ்நாட்டில் உள்ள இத்தகைய நாற்பத்தெட்டு பாட சாலைகளில் உள்ள, திறமை மிகுந்த மாணவர்களைத் தேர்ந் தெடுத்து, ருக்வேத போட்டியில் கலந்துகொள்ளச் செய்தார் கள். திருச்சிமாவட்டத்தில், முசிரியில் நடைபெற்ற அந்தப் போட்டியில், மிகச் சிறந்த மாணவனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டான் சங்கரன். இந்தச் செய்தியைப் பண்டரிபுரத்தில் தங்கி இருந்த பரமாச்சாரியார், காஞ்சிப் பெரியவர்கள் அறிந்து கொண்டார். சங்கரனை அங்கே அழைத்து, அவனை வேதம் ஓதச் சொல்லிக் காதால் கேட்டு, கண்ணொளியால் ஆசி வழங்கினார். இரண்டாயிரத்து எழுநூறுரூபாய் பரிசும் கொடுத்தார். பெரியவரின் கவனத்தை சங்கரன் அப்போதே கவர்ந்துவிட்டான்.

காஞ்சீபுரத்தில் நவராத்திரிபூஜை விமரிசையாக நடை பெற்றது. அப்போது காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சுவாமிகள் பூஜையில் ஈடுபட்டிருந்தார். போளூரி லிருந்த பாடசாலையிலிருந்து வீட்டுக்குச் சென்றிருந்த மாண வர்களிடையே இருந்த சங்கரன், பூஜாமந்திரங்கள் சொன்ன வர்கள் ஓரிடத்தில் தவறாகக் கூறிவிட, அதைப் பெரியவர் திருத்த முற்படுமுன், தானே எடுத்துரைத்துவிட்டான். அதை அன்புடன் கவனித்து அருட்புன்னகை செய்தார் சுவாமிகள்.

காஞ்சி காமகோடிபீடம் ருக்வேத அடிப்படையில் ஆச்சாரிய சுவாமிகளைப் 'பாரம்பரியமாகக் கொண்டு வருவது. அறிவு முதிர்ந்து பக்குவமாகி, ஞானம் பூத்துவிடத் தொடங்கி இருந்த இளம்பாலகன் சங்கரன், ருக்வேதியாக இருந்தது மிகப்பொருத்தமாகவே அமைந்தது. ஸ்ரீகாஞ்சி மடத்தின் பார்வை அவன்மீது விழத்தொடங்கிற்று...

சங்கரனின் பெற்றோரைப் பரமாச்சாரியார் வடக்கே தங்கி இருந்த ஆசிரமத்துக்கு அழைத்து, நேரிலேயே இந்தக் கருத்தை வெளியிட்டார்கள். அதே கருத்து புதிய பெரியவர் கள் ஸ்ரீஜயேந்திர சரசுவதி சுவாமிகளுக்கும் இருந்தது. இவற்றைப் பெற்றோர் உணர்ந்தாலும் யாரிடமும் கூற வில்லை. அவர்களுடைய மகன் சங்கரனுக்கும் அது தெரி யாது. சில மாதங்கள் கழிந்துவிட்டன.

திடீரென்று அந்த நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என்று கூறி, ஆச்சாரிய சுவாமிகளிடமிருந்து ஆணை வந்தது. தந்தை சாஸ்திரிகள் அந்த ஆணையை ஏற்று, முடிவுக்கு வந்து விட்டார். ஆனால் அப்போதும் அந்த நிகழ்ச்சி, எங்கே, எப்போது நடைபெறப் போகிறது என்று சங்கரனுக்குத் தெரியாது.

சங்கரன் திருச்சிக்கு அருகில் உள்ள அல்லூரில் நடந்த லீலாவதியம் போட்டியில் கலந்து கொண்டு திரும்பி, இரண்டு நாட்களே ஆகி இருந்தன. அதன்பின் தந்தையாருடன் சொந்த ஊரான தண்டலம் கிராமத்துக்குச் 'சென்று, பெற் றோர், சகோதர சகோதரிகளுடன் இருந்து பேசிவிட்டு, தனது வாழ்க்கையில் இந்தப் பெருமைமிகு மாற்றத்துக்கு மெல்லத் தயாராகிவிட்டான் சங்கரன்.

காஞ்சிபுரத்தில் இருபத்தொன்பதாம் தேதி சந்நியாசம் மேற்கொள்ளப் போகிறான் என்பது முடிவாயிற்று. இந்த நன்னாளைப் பரமாச்சாரியார் தேர்ந்தெடுத்ததற்குச் சில காரணங்கள் உண்டு. அப்படியொரு அபூர்வமான நாளும் நேரமும் கிழமையும் பல ஆண்டுகளுக்கு ஒருமுறையே அமையக்கூடும். இந்த நாளை இப்போது தவறவிட்டு விட்டால், இன்னும் ஐந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டி இருந்திருக்கு மாம்.

சுற்றத்தாருடனும் நண்பர்களுடனும் பழகிவிட்டுத் திரும்பிய சங்கரன், மனத்தளவில் மெல்ல மெல்லப் பக்குவ மாகிவிட்டான். தனக்கு சந்நியாசம் அருளப்போகிற நிகழ்ச் சியை ஒரு கார்டில் எழுதி நண்பனுக்குத் தபால் மூலம் அனுப்பினான். காஞ்சியில் இந்த மாபெரும் நிகழ்ச்சிக்கு ஆயத்தங்கள் தொடங்கின. சந்நியாசம் வாங்குவதற்கு முன் நடைபெறும் நிகழ்ச்சிகளான விரதம், நாந்தி முதலியவை களில் ஈடுபட்டான். முந்தினமும் அதற்கு முன்தினமும் பூர்வாங்க காரியங்கள் நடைபெற்றன. இருபத்தெட்டாம் தேதி சிகைக்கு இரண்டொரு ரோமங்களை மட்டும் விட்டு வைத்திருந்தனர். அன்று ஆசாரியம் அடையவில்லையாயினு லும், துறவிக்கோலத்துக்குரிய அம்சங்களை ஏற்படுத்தி விட்டார்கள். அதில் தண்டத்துக்குரிய கோல் மட்டும் தந்திருந்தார்கள்.

உண்ணுவிரதம், இரவெல்லாம் கண்விழிப்பு, இவை யெல்லாம் அனுஷ்டிக்கப்பட்டன. மடத்து வேத விற்பன் னர்கள் மந்திரக்கிரியைகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். சங்கரனுடைய பெற்றோர், சகோதர சகோதரியைத் தவிர, மற்ற உற்றார் உறவினர்களின் மனத்திலே. சிறு கலக்கம் தேங்கி இருந்தது. அவர்களிடையே குடும்பத்தில் ஒருவனாக இருந்த சங்கரன், உலகத்துக்கே உரிய ஜகத்குருவாகப் பொறுப்பேற்கப் போகிறான்...

மேமாதம் இருபத்தெட்டாம் தேதி. ஸ்ரீகாஞ்சிமடத் தின் புதிய துறவரசு உருவாகப் போகும் நிகழ்ச்சியைத் தினசரியிலும், வானொலி மூலமாகவும் மக்கள் அறிந்து கொண்டார்கள். பக்தர்கள் இந்த மாபெரும் நிகழ்ச்சியை நேரில் கண்டு, சுவாமிகளைத் தரிசிக்க, காஞ்சிமாநகரில் குவியத் தொடங்கினார்கள். ஸ்ரீ காஞ்சிமடத்தின் சூழ்நிலை முழுவதும் 'ஜே,ஜே' என்று "ஆகிவிட்டது.

மறுநாள் வைகறை நேரத்தில் இந்த நிகழ்ச்சி நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீகாமாட்சி அம்மன் ஆலயத்தில் காலை ஐந்து மணியிலிருந்து ஆறு மணிக்குள்ளாக இது நடைபெறும் என்று மக்கள் தெரிந்துகொண்டார்கள். பக்தர்கள் காலை மூன்று மணிக்கே எழுந்து நீராடிவிட்டு, தூய ஆடை தரித்து, திருக்குளத்தைச் சுற்றி வந்து கூடி விட்டார்கள்.

ஸ்ரீகாமாட்சி அம்மன் ஆலயம் திருக்கோலம் பூண்டிருந் தது. கோவிலும் கோபுரமும் தீபங்களாலும், மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பக்தர்களும், புகைப்படம் எடுப் பவர்களும், நிருபர்களும் படித்துறையில் இந்த நிகழ்ச்சி நடைபெற வேண்டிய இடத்தில் பெருங்கூட்டமாகக் கூடி விட்டதால், நெரிசல் மிகுந்துவிட்டது. அதனால் பெரியவர் கள் இந்த நிகழ்ச்சியைத் திடீரென்று தெப்பக்குளத்தில் எதிர்க்கரைக்கு மாற்றிவிட்டார்கள்.

